

# தன்னை உணர்வதற்கான அமைதிப் புரட்சி



கர்நாடகத்தின் ஒரு குக்கிராமம் அது. அதனுள் அசைந்து அசைந்து உள் நுழைகிறது அந்த வெள்ளை ரதம். அதனின் வருகைக்காக மிகப்பெரிய மனித வரிசை காத்துக் கிடக்கிறது. ஆறு சக்கரங்களும் மெல்ல அழுந்தி நின்றவுடன் அந்தப் பெரிய நடமாடும் மருத்துவமனையின் கதவுகள் திறக்க, உள்நுழைய ஏதுவாகப் படிக்கட்டுகள் பொருத்தப்படுகின்றன.

அனைவரையும் கடந்து வேகமாக வருகிறார் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி. கன்னடமும் கனிதெலுங்கும் தமிழும் கலந்து பேசும் அவர், தன் கையிலிருக்கும் நூறு ரூபாய் நோட்டை எடுத்து அந்த இலவச சேவை மையத்தின் மருத்துவரிடம் கொடுக்க முனைகிறார்! மருத்துவரோ மறுத்துவிட்டு, வியப்புடன் என்ன விஷயம் என்று கேட்க அங்கு நடந்தது வெறும் தகவல் பரிமாற்றம் அல்ல, ஒரு உயிர் தன் வேதனையிலிருந்து வெளிப்பட்டதின் அனுபவப் பரிமாற்றம்.

எத்தனையோ மருத்துவரிடம் அந்த கர்நாடகப் பெண்மணி தன்னைத் துன்புறுத்தி வந்த கழுத்துக் கட்டியை காண்பித்துள்ளார். சுமார் 2000 ரூபாய் வரை செலவாகும் என்ற தகவலால் கலவரமடைந்தார். காரணம் போதிய பணமில்லை. ஆனால் இந்த இலவச மருத்துவமனையில் சல்லிக்காசு செலவில்லாமல் வீட்டிற்கு அருகேயே மருத்துவம் பார்க்கப்பட்டு குணப்படுத்தப்பட்டார். அந்த நன்றியறிதலின் வெளிப்பாடுதான் 100 ரூபாய் கொடுக்க முயன்றது.

இந்த இலவச நடமாடும் மருத்துவ மனைக்குப் பின்னர் இயங்குவது யார்? என அறிந்துகொள்வதற்கு முன், இப்பொழுது சாவக்காட்டுபாளையம் என்னும் ஊரைப் பார்க்கலாம். சத்தியமங்கலத்திற்கு அருகே உள்ள இந்தச் சிற்றூரில் முக்கியமானவை இரண்டுதான். ஒன்று பட்டு நெசவு. இரண்டு கைப்பந்து விளையாட்டு.

ஆழிப்பேரலை (சுனாமி) தமிழகத்தைத் தாக்கியபோது இந்த சாவக்காட்டு பாளையம் இளைஞர்களில் சிலர் கடலூரை நோக்கிப் பயணிக்கிறார்கள். கையில் கைப்பந்துடன் மடாம் முழுதும் சக மனிதனுக்கு ஏற்பட்ட துன்பம் இருந்தாலும், அவர்களின் மன உளைச்சலிலிருந்து விடுபட விளையாட்டு ஒரு சிறந்த வழி என்ற உணர்வினை இந்த இளைஞர்களுக்குச் சொல்லாமல் உணர்த்தி, பல கிராமங்களில் கைப்பந்து மைதானங்களை உருவாக்கித் தேவையான வலைப்பந்து போன்றவற்றை ஏற்படுத்தித் தங்களின் சுய உந்துதலால் பிறர் துயர் துடைக்கும் மனோபாவத்தை உருவாக்கியுள்ளது கிராம புத்துணர்வு இயக்கம். இதனை இயக்குவது யார்? என அறியும் முன்னர் நாம் இப்போது கோபியின் கொளப்பலூர் கிராமத்திற்குச் செல்வோம். அங்கே அறுபதைத் தாண்டிய ஐந்தாறு பெரிசுகள் விரைந்து செல்லுமிடம் விளையாட்டு மைதானம். இந்தப் பெண்களுக்குத் தேவையான உற்சாகத்தைத் தருகிறது கிராம புத்துணர்வு இயக்கத்தின் பெண்களுக்கான எறிபந்து பயிற்சிக்களம்.

கோபிச்செட்டிப்பாளையத்திற்கு அருகே உள்ளது அந்தக் குக்கிராமம். ஏனெனில் அந்தக் கிராமத்தைச் சுற்றி இருசக்கர வாகனத்தில் சென்றால் உங்களுடைய வாகனம் உங்களுக்கு உரியதாய் இருக்காது. நீங்கள் மட்டும் கைகால்களில் அடிபடாமல் தப்பி வந்தால் உங்களுக்குக் கொஞ்சம் அதிர்ஷ்டம் இருக்கிறது என்று அர்த்தம். ஆரலைக்கள்வர்களின் தொடர் கலாச்சாரமாய்த் திகழ்ந்த அந்த கிராமத்துவாசிகளை நோக்கி பகலில் யாரேனும் வருவார்கள் என்றால் அது தாங்கள் இழந்துவிட்ட பம்புசெட்டையோ ஆடுமாடுகளைப் பற்றியோ தகுந்த சன்மானம் கொடுத்து மீட்கத்தான்.

அந்தக் கிராமத்தின் பேரைச்சொல்லி அந்த ஊரிலிருந்து வருகிறேன் என்றால் எந்தப் பண்ணாடியும் கூலிக்குச் சேர்க்கமாட்டார். அவர்களின் குணம் அப்படி. இப்போதோ நிலைமை தலைகீழ். அந்தப் பகுதியின் மிக நாணயமான ஊராகவும் எல்லா மக்களையும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் நிலைமை மாறியுள்ளது.

இந்த மாற்றத்திற்குப் பின்னால் இயங்கிய சக்தி எது?

மேலே எழுப்பிய கேள்விகளுக்கு விடைகாணும்முன் சில ஆழ்ந்த சிந்தனைக்குச் செல்வோம்.

சமூகம் என்பது பல்வேறு மனிதர்களின் தொகுப்பு. மனிதன் என்பவன் பல்வேறு சிந்தனைகளால் அலைக்கழிக்கப்படும் சமூகப்பிரஜையாக இருக்கிறான். ஒவ்வொரு தனிமனிதனுக்குள்ளும் குறுக்கும் நெடுக்குமாகப் பல்வேறு சிந்தனைகள் எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கின்றன. எந்தப் பணியில் ஈடுபட்டிருந்தாலும் அந்தப் பணியில் கவனமும் அதை விட்டு விலகிய வேறு பல சிந்தனைகளும் ஒரு சினிமாவைப்போல் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஓடிக்கொண்டே இருக்கிறது. இத்தகைய சிந்தனைகளே அடிப்படைத் தேவைகள் பூர்த்தியடைந்த மனிதனை வேறு தள வரிசைக்கு இட்டுச்செல்கிறது. இதனையே நாம் தேடுதல் என்று குறிப்பிடுகிறோம். இந்தத் தேடுதல் என்பது வாழ்க்கை



மாரீசன்

முழுமை அடையாத தன்மையை, அதிருப்தியை, நாகரிகமாகக் குறிக்கிறது.

தேடுதல் என்பது எது குறித்து நிகழ்கிறது? எதனைத் தேடுகிறோம்? என்ற பல உளவியல், ஆன்மிகம் சார்ந்த கேள்விகளை உள்ளடக்கியே இருக்கிறது. அவரவர் அனுபவத்திற்கும் சமூகச் சூழலுக்கும் ஏற்ற வண்ணம் தேடுதலை மனிதர்கள் அமைத்துக் கொள்கிறார்கள். வேகமாக மாறிவரும் வாழ்க்கை, கலாசார சிதைவு, பல்வேறு ஊடகங்களின் தாக்குதல், நவ நாகரிக உலகின் ஊடுருவல்கள் தனி மனிதனைப் பல்வேறு மன உளைச்சலுக்கு ஆட்படுத்துகின்றன. உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், அன்பு செலுத்த மனிதர்கள் என்ற நிலையில் வாழ்ந்தாலும் அவனுக்குள் ஏதோ ஒரு தாகம், அதிருப்தி இருந்துகொண்டே இருக்கிறது. அதற்கான விடையைத் தேடுபவனையே நாம் தேடுதலில் உள்ளவன் என்று குறிக்கிறோம்.

இவனுக்கு வழிகாட்ட எப்போதுமே சமூகத்தில் உளவியல் அறிஞர்கள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், மதவாதிகள், ஆன்மீகவாதிகள் எனப் பல்வேறு ஆளுமைகள் இயங்கிவந்துகொண்டே இருக்கின்றன. எந்த ஒரு துறையில் மிக ஆழமாக ஈடுபட்டாலும் அந்த ஒரு குறிப்பிட்ட துறையின் ஆளுமை வளர்கிறதே தவிர வாழ்வில் முழுமை வருவதே இல்லை. எனில் வாழ்வின் முழுமை எதில்தான் இருக்கிறது?

தன்னை உணர்வதற்கான அமைதிப் புரட்சியில்தான் அது இருக்கிறது என்று பளீரெனக் கூறுகிறார் சத்குரு ஜகி வாசுதேவ்.

இந்திய யோக ஞான மரபில் சுயமாகவே தன்னை உணர்ந்தவர்களைக் குறிக்கும் சொல்லாடல்தான் 'சத்குரு' எனப்படுவதாகும். நிகழ்காலத்தில் வாழும் ஞானியாகத் திகழும் சத்குருவால் வடிவமைக்கப்பட்டதுதான் வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள ஈஷா யோக மையம்.

நவீன உலகின் தேவைகளை மனதில் கொண்டு நிகழ்காலத்தின் நடைமுறைகளுக்கு ஏற்ப யோகக் கலையை மக்களிடம் எடுத்துச் செல்வதுதான் ஈஷா யோக மையமாகும். இந்த வளாகத்திற்குள் நாம் நுழைந்தால் முற்றிலும் வித்தியாசமான தியானலிங்கம் என்னும் ஒரு பெருவெளி உள்ளது. இந்தத் தியானலிங்கம் என்பது இல்வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள யோகியால் மட்டுமே பிராணப் பிரதிஷ்டை முறையில் ஸ்தாபிக்கப்பட்டதாகும். இந்துக் கலாசாரத்தில் கோவில்களும் லிங்கங்களும் புதிய விஷயமன்று. ஆனால் தியானலிங்கமோ ஏழு சக்கரங்களிலும் சக்தியை நிலைநிறுத்தி திறந்த மனத்தோடு தம் முன்னே கண்மூடி அமைதியாக சுமார் 15 நிமிடங்கள் அமரும் ஜீவனை யோக வழியில் ஆழமாய் வழிநடத்திச் செல்லும் வல்லமை உடையது. இதனின் ஆகர்ஷண சக்தி வார்த்தைகளுக்குள் அடங்காதது. அனுபவித்து உணர வேண்டியது. இவ்வளாகத்துக்குள் நுழையும்போதே அனைத்து மதங்களும் மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கே எனச் சொல்லாமல் சொல்கிறது சர்வமதஸ் தம்பம். உள் பிரகாரத்தின் ருத்ராட்ச படிக்கட்டுகளைத் தாண்டி வந்தால் இருபுறமும் பதஞ்சலி தொடங்கி வனஸ்ரீவரை தன்னை உணர்ந்த ஞானிகளின் வாழ்க்கை கற்சித்திரங்களால் விளக்கப்படுகிறது. பாதம் முதல் சிரசு வரை நெஞ்சார அழுத்தித் தன்னை முழுமையாய் ஒப்படைத்த சரணாகதியைக் குறிக்கும் அந்த அற்புதக் கலைவடிவைக் கடந்து சென்றால் அரைக்கோள வடிவ அமைப்புக்குள் ஜலஸீமா எனும் நீர்நிலையின்மேல் உள்ளார்ந்து எழும் குண்டலினி சக்தியைக் குறிக்கும் வண்ணம் அமைந்துள்ள சீறிவரும் நாக ரூபத்தின் மேல் திரண்டு எழுந்து கம்பீரமாய்க் காட்சி அளிக்கிறது தியானலிங்கம். மனித உடலில் இயங்கும் ஏழு சக்கரங்களைக் குறிக்கும்




வண்ணம் தியானலிங்கத்திலும் ஏழு சக்கரங்களைப் பிரதிபலிக்கும் வகையாகக் குறியீடுகள் குறிக்கப்பட்டுள்ளன. இக் கருமண்டபத்திலுள்ளே இயல்பாக எழுச்சியினைப்பெற தவக்குகைகள் அமைக்கப்பட்டுள்ளன. எடுக்கும் அடி கூட ஒலியை எழுப்பக்கூடாது என்ற அடிப்படையில் மெல்ல நடந்து உள்ளே போகும்போது மௌனம் காத்து மனிதராகவும், வெளியே வரும்போது தெய்வீக சக்தியினை ஒரு துளியேனும் அருந்தி உணர்ந்தவராகவும் நாள்தோறும் மக்கள் இங்கு வந்து போகின்றனர்.

துறவிகள் என்றால் வாழ்க்கையைத் துறந்தவர்கள் அல்ல. அதனை மேன்மைப்படுத்தவும் வளமைப்படுத்தவும் வழி தெரிந்தவர்கள் என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம், ஈஷா யோகத்தின் முழு நேர அர்ப்பணிப்பாளர்களானாலும் சரி, தன்னார்வத் தொண்டர்களானாலும் சரி அவர்கள் இலவச மருத்துவ சேவையிலிருந்து மரக்கன்றுகள் நடுவது வரை பல்வேறு சமூக வளர்ச்சிப்பணியில் தங்களை அர்ப்பணித்துள்ளார்கள்.

இந்தியாவின் இதயம் கிராமத்தில் இயங்குகிறது என்ற வாக்கு எந்திரத்தனமாகத் திரும்பத் திரும்பக் கூறப்பட்டு வெற்றுக் கோஷமாகிவிட்ட சூழ்நிலையில், ஈஷாவின் கிராமப் புத்துணர்வு இயக்கம் அடிப்படை



வசதி ஏதுமில்லாக் கிராமங்களை நோக்கித் தனது இலவச நடமாடும் மருத்துவமனையை அனுப்பி வைக்கிறது. இந்த நடமாடும் மருத்துவமனையில் ஒரு தகுதி பெற்ற மருத்துவரும் இரு உதவியாளர்களும் ஒரு வாகன ஓட்டுநரும் உள்ளனர். கடினமான மலைப்பாங்கான இடமானாலும் சரி, சமதளமாயிருந்தாலும் சரி, எங்கெல்லாம் மருத்துவ வசதி இல்லையோ அங்கெல்லாம் ஈஷாவின் தொண்டர்கள் பயணித்துத் தொண்டாற்றுகிறார்கள். பல இலட்சங்கள் செலவு செய்து புற்றுநோய் போன்ற கொடிய நோய்களால் தாக்கப்பட்டவரை நம்மால் கவனிக்க இயலாமல் போகலாம். ஆனால் ஒரு ரூபாய் செலவில் ஒரு சிறு சொட்டுமருந்து மூலம் ஒருவரின் கண் பார்வையை நம்மால் வளப்படுத்த முடியும் என்ற சத்குருவின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இயங்குகிறது இந்த நடமாடும் இலவச மருத்துவமனை.

கோவை, சேலம், ஈரோடு, கடலூரர், சென்னை ஆகிய தமிழகத்தின் முக்கிய மாவட்டங்கள் மட்டுமின்றி கர்நாடகத்தின் சில பகுதிகளிலும்



இயங்கிவருகிறது கிராமப் புத்துணர்வு இயக்கம். இளைஞர்களிலிருந்து முதியோர்கள் வரை ஜாதி மத பேதமின்றி இணைந்து பணியாற்றும் இந்த இயக்கம் விளையாட்டின் மூலமாகவும் அவர்களை ஒருங்கிணைக்கிறது.

ஓசோனின் ஓட்டை, பாலைவனமாகி வரும் தமிழகத்தின் சுற்றுப்புறச்சூழல், இவற்றைக் கருத்தில் கொண்டு சத்குருவால் வடிவமைக்கப்பட்ட பிறிதொரு இயக்கம்தான் 'பசுமைக்கரங்கள் திட்டம்'. 2006ஆம் ஆண்டில் அக்டோபர் 15லிருந்து 17க்குள் 8,52,587 மரங்களை நட்டு தமிழகத்தின் பசுமைக்குடையினை பரவலாக்கியிருப்பது ஈஷாவின் பெரும் பணியாகும். மேலும் வரும் 10 ஆண்டுகளில் 11.04 கோடி மரங்களை நட்டு தமிழகத்தின் நீர்வளம், மண்வளம், மனிதவளம் மேன்மையுற நடைமுறை சாத்தியமுள்ள திட்டங்கள் ஈஷாவிடம் உள்ளன. நடப்பாண்டில் 2.5 கோடி மரங்கள் நடுவதை இலக்காக்கிக்கொண்டு செயல்பட்டு வருகிறது.

கல்வி என்பது வியாபாரமாகிவிட்ட சூழலில் ஏழ்மையானவர்கள் அறிவு வளம் பெருக தமிழகத்தின் அனைத்து (206) தாலுகாக்களிலும் ஒவ்வொரு மெட்ரிகுலேஷன் பள்ளியை நிறுவ உள்ளது. இதன் தொடக்கமாக கோவை அருகே உள்ள சந்தேகவுண்டன்பாளையம் என்னும் கிராமத்தில் ஈஷாவின் முதல் ஈஷா வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி நிறுவப்பட்டு வெற்றிகரமாக இயங்கிவருகிறது. இப்பகுதியிலுள்ள சாதாரண ஏழை மக்களுக்கு மிகக் குறைந்த கட்டணச் செலவில் கம்ப்யூட்டர் பயிற்சியோடு கல்வி வழங்கப்படுகிறது.

ஆழிப்பேரலையால் தமிழகம் தத்தளித்தபோது கடலூருக்கும் சென்னைக்கும் நாகைக்கும் கன்னியாகுமரிக்கும் தனது இலவச நடமாடும் மருத்துவமனையையும் தன்னார்வத் தொண்டர்களையும் அனுப்பி நேசக்கரம் நீட்டியதோடு மட்டுமின்றி கடல்வாழ் மக்களின் புணர்வாழ்வுக்காக சுனாமி தாக்கா வீடுகள், கடலேறிச் செல்ல கட்டுமரங்கள் என அத்தனையையும் நல்கியது. இயற்கையின் சீற்றத்தால் வெள்ளப் பெருக்கெடுத்து திருச்சியின் ஸ்ரீரங்கம் தத்தளித்த போது ஈஷாவின் தொண்டர்கள் மருத்துவ முகாம் நடத்தியதை அப்பகுதி மக்கள் இப்போதும் நன்றியறிதலோடு நினைவுகூர்கிறார்கள்.

உறியடிப்பதிலிருந்து கபடி விளையாட்டு வரை, சிலம்பத்திலிருந்து ரேக்ளா ரேஸ் வரை தேய்ந்துவரும் கலாச்சாரத்தை மீட்டெடுக்கும் வண்ணம் வருடந்தோறும் நடத்துகிறது 'கிராமோத்சவம்' மற்றும் 'கிராம ஒலிம்பிக்ஸ்'. இந்நிகழ்வில் நாட்டுப்புறப் பாடல்கள், நடனம், கிராமிய உணவு வகைகள் என பன்முகங்களில் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

ஆங்கில மருத்துவம் பக்கவிளைவினைக் கொண்டதாகும். இந்தியத் தொன்மை மருத்துவமோ நோயின் ஊற்றுக்கண்ணைக் கண்டறிந்து அதனைக் களைந்தெறியும் வன்மை கொண்டதாகும். இதனின் அடிப்படையில் ஈஷாவின் 'ஆயுர் ரசாயனா' ஆயுர்வேதம் மூலம் சிகிச்சையளித்து வருகிறது.

ஈஷாவின் தியானலிங்கம் மாதத்தில், அமாவாசையிலிருந்து பௌர்ணமி வரை பெண்களால் பேணப்படுவது மட்டுமின்றி இக்கோவிலில் பக்தர்கள் நேரடியாகவே லிங்கத்திற்கு பால் மற்றும் நீர் அபிஷேகம் அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்களில் நடத்தலாம். இக்கோவிலில் சம்பிரதாய பூஜை கிடையாது. பூசாரியோ அர்ச்சகரோ கிடையாது.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இயங்குவது ஈஷாவின் யோக வகுப்புகளாகும். 13 நாட்களில் ஒரு மாயவித்தை போல் மனிதனுக்குள் இருக்கிற மகத்தான சக்தியினைத் தொட்டுக்காட்டி உணர வைத்து அதனின் உள்ளொளியில் அவனைத் திளைக்கவைத்து தன்னலமும் பிறர் நலமும் பேணும் வண்ணம் ஒரு புதிய சக்தியாக மாற்றிவிடுகிறது ஈஷாவின் யோக வகுப்புகள்.

ஆரோக்கியம் நமது அடிப்படை உரிமை. ஆனந்தம் நமது பிறப்புரிமை.. தன்னை உணர்வதற்கான அமைதிப்புரட்சியை அனைவரும் வாழ்வில் ஒரு முறையேனும் சுவைக்கவேண்டிய ஒன்றாகும். ●